# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 10.12.2010 அன்று
## ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் ஒரு கவிதையை படித்துக் காட்டினார்கள்:**

“அவர்கள் தங்களை யஸீதாக ஆக்கிக் கொண்டு உங்களை ஹுஸைனாக ஆக்குகின்றார்கள். எதிரிகளைஅம்பு எய்தும்படி விட்டு விடுங்கள். இது எவ்வளவு நல்ல வணிகமாகும்.”

இந்த கவிதை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களால் 1935 –ல் ஜமாஅத்திற்கு எதிராக எழுந்த எதிர்ப்பின் போது இயற்றப்பட்ட கவிதையாகும். இதில் ஜமாஅத்திற்கு பொறுமை, தைரியம் மற்றும் உறுதிப்பாட்டிற்கான அறிவுரை செய்யப்பட்டுள்ளது. எவ்வாறிருப்பினும், நான் தற்போது அந்த கவிதையின் அடிப்படையில் சில விஷயங்களை கூறுவேன். இக்கவிதையின் மூலமாக ஒவ்வொரு முஸ்லிமுக்கும் இஸ்லாமிய வரலாற்றின் ஒரு வேதனை மிக்க மற்றும் அநீதியின் உச்சகட்ட சம்பவம் நினைவுக்கு வரும். ஆனால் எவர் அநீதி என்னும் ஆட்டுரலில் அரைக்கப்படுகின்றாரோ அவர்தான் இந்த வேதனை மற்றும் துயரம் மிகுந்த சம்பவத்தின் ஞானத்தைப் பெற முடியும். இந்த சம்பவத்தைக் கேட்டு நிச்சயமாக ஒவ்வொரு முஸ்லிமும் அனுதாபத்தையும், துன்பத்தையும், துயரத்தையும் வெளிப்படுத்துகின்றார். மேலும் ஷியா சகோதரர்கள் ஒவ்வொரு ஆண்டும் தமது வழிமுறைக்கேற்ப முஹர்ரம் மாதத்தில் இதனை வெளிப்படுத்த முயற்சி செய்கின்றனர். நம்மைப் பொருத்தவரை அதில் அவர்கள் எல்லை மீறி விடுகின்றன். எப்படியிருப்பினும், அது அவர்களின் நடைமுறையாகும். ஆனால் நான் கூறியது போன்று அநீதிக்குள்ளானவர் தான் இந்த அநீதியின் உண்மைத்துவத்தை உணர முடியும். இன்று இக்காலத்தில் அஹ்மதிய்யா ஜமாஅத்தை தவிர வேறு எவரால் கர்பலா சம்பவத்தை சிந்தித்து கண்டுணர முடியும்? எனவேதான் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தங்களை ஹுஸைனாக ஆக்குகின்றார்கள் என்று கூறினார்கள். இந்த இரண்டு தரப்பினரும் யாராக இருந்தார்கள்? இரண்டு தரப்பினரும் லாயிலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸுலுல்லாஹ் என்ற கலிமாவை கூறக் கூடியவர்களாக இருந்தனர். ஆனால் இருவரில் ஒருவர் கலிமாவின் உண்மைத்துவத்தைப் புரிந்து அநீதியிழைக்கப்பட்டவரானார். மற்றொருவரோ கலிமாவை மதிக்காமல் அநீதியிழைக்கக் கூடியவரானார். ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் (ரலி) அவர்கள் மற்றும் அன்னாரின் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் சில நண்பர்கள் கொடூரமான முறையில் ஷஹீதாக்கப்பட்ட கர்பலா சம்பவம் உண்மையில் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் ஷஹாதத் (உயிர்தியாகம்) சம்பவத்தின் ஒரு தொடர்ச்சி ஆகும். இறையச்சத்தில் குறைவு ஏற்படத் தொடங்கும்போது, சுயநலம், பொதுநலத்தை விட மேலோங்கி விடும் போது, மார்க்கத்தை விட உலகம் முதன்மையாகி விடும் போது அநீதி மற்றும் கொடுமையின் உச்சத்தை மனிதன் தொட்டு விடுவான். அல்லாஹ்வின் பெயரால் அல்லாஹ்வின் அடியார்களின் இரத்தம் சிந்தப்படும். கலிமா கூறக்கூடியவர்களை அநீதி மற்றும் துன்பத்திற்கு உள்ளாக்குவது எவ்வளவு பெரிய துர்பாக்கியமாகும்? எந்த அளவுக்கு என்றால், கலிமா கூறக்கூடிய ஒருவரே, மற்றொருவரை கொடுமைக்கு உள்ளாக்குகின்றார். அப்பாவிகள் மற்றும் குழந்தைகளை கொலை செய்யக்கூட தயங்குவதில்லை. இறைவன் மற்றும் இறைதூதரின் பெயரால் இறைவன் மற்றும் தூதருக்காக உயிரையும் பொருளையும் கண்ணியத்தையும் தியாகம் செய்யக்கூடியவர்களை துன்பத்திற்கும் தொல்லைகளுக்கும் ஆளாக்குகின்றனர். இறைவன் மற்றும் தூதரின் பெயரால் அநீதிகள் இழைத்துவரும் இம்மக்களின் துரதிஷ்டம் இதைவிட வேறு என்னவாக இருக்க முடியும்? திருக்குர்ஆன் இதுபோன்றவர்களின் தீய நிலையை எடுத்துரைத்தவாறு கூறுகின்றது.

**மேலும் எவரேனும் நம்பிக்கை கொண்ட ஒருவரை வேண்டுமென்றே கொலை செய்து விட்டால், அவனுக்குரிய தண்டனை நரகமேயாகும். அதில் அவன் நெடுங்காலம் தங்கி விடுவான். அல்லாஹ் அவனிடத்து கோபங்கொண்டு அவனை சபித்து விடுவான். மேலும் அவனுக்கு மாபெரும் ஆக்கினையையும் ஏற்பாடு செய்துள்ளான். (4:94)**

அல்லாஹ் இதுபோன்றவர்களுக்கு வெறுப்பின் உச்சகட்ட சொல்லை பயன்படுத்தியுள்ளான். அவரை நரகத்தில் போடுவதோடு மட்டுமல்ல; மாறாக, ஒரு நீண்ட காலம் நரகம் அவரது இருப்பிடமாக இருக்கும். அடுத்து அல்லாஹ்வின் கோபம் அவர் மீது இறங்கிக் கொண்டிருக்கும். அவர் அல்லாஹ்வின் சாபத்தின் அடையாளமாகிக் கொண்டே செல்வார். அல்லாஹ்வின் இந்த சாபம் என்பது சாதாரண விஷயமல்ல. மாறாக அது மிகப்பெரிய தண்டனையாகும். கலிமா கூறக்கூடியவராக இருந்து கொண்டு நெருப்பில் வீழ்ந்து தொடர்ந்து அல்லாஹ்வின் கோபம் மற்றும் சாபத்தின் பெரிய தண்டனையால் ஒரு நபர் சூழப்படுவதை விட பெரிய துர்பாக்கியம் வேறு என்னவாக இருக்க முடியும்? எனவே எவர் தமது சுயநலம் மற்றும் உலக இச்சைகளுக்காக இதுபோன்ற செயல்களை செய்கின்றாரோ அவர் அல்லாஹ்வின் வெறுப்பின் உச்சத்திற்கு ஆளாகுகின்றார். மேலும் அநீதியிழைக்கப்பட்டவர்கள் கொலை செய்யப்பட்டதன் காரணமாக, **அதாவது அவர்கள் தங்கள் இறைவனிடத்தில் உயிருள்ளவர்கள். அவர்கள் உணவளிக்கப்படுகின்றனர். (3:170)** என்ற கண்ணியத்தைப் பெறுகின்றனர்.

அல்லாஹ் இவ்வாறு அவர்களுடன் நடந்து கொள்கின்றான். ஆக, எவர் அல்லாஹ்வின் பார்வையில் உயிருள்ளவராக உள்ளாரோ, மேலும் எவருக்கு தனது இறைவனிடமிருந்து நற்கூலி வழங்கப்படுகின்றதோ அவருக்கு இதைவிட வேறு என்ன வெகுமதி கிடைக்க முடியும்? ஹஸ்ரத் இமாம் ஹஸன் மற்றும் இமாம் ஹுஸைன் (ரலி) அவர்களைப் பற்றி ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அவர்கள் சொர்க்கத்தில், இளைஞர்களின் தலைவர்களாயிருப்பர். மேலும் இவ்விருவருக்காகவும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்விடம் இவ்வாறு துஆவும் செய்தார்கள்.

அல்லாஹ்வே! நான் இவர்களை நேசிக்கிறேன். நீயும் இவர்களை நேசிப்பாயாக! ஆமீன்.

எனவே, எவர் இந்த அளவுக்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் துஆவிலிருந்து பலன்பெறக்கூடியவராக இருப்பாரோ மேலும் ஷஹாதத் (உயிர்தியாகி) என்ற அந்தஸ்தையும் பெற்றிருப்பாரோ அவர் நிச்சயமாக அல்லாஹ்வின் வாக்குறுதிக்கேற்ப சொர்க்கத்தின் உயர்தரமான நற்கூலிக்கு வாரிசாகி விடுகின்றார். மேலும் அன்னாரின் கொலையாளி நிச்சயமாக அல்லாஹ்வின் கோபத்திற்குள்ளாகி விடுவான்.

முஹர்ரம் என்ற மாதத்தின் முதல் பத்து நாட்களை நாம் கழித்துக் கொண்டிருக்கிறோம். இன்றிலிருந்து 1400 வருடங்களுககு முன்பு இந்த மாதத்தின் 10-ம் தேதி ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அந்த நேசரை அநீதியாளர்கள் ஷஹீதாக்கினர். அந்த சம்பவத்தைக் கேள்விப்பட்டு மெய்சிலிர்த்து விடுகின்றது. நாம் எவர் மீது வாளேந்துகின்றோம்? என்ற சிந்தனை அந்த அநீதியாளர்களுக்கு எழவில்லை? நான் கூறியது போன்று ஈமான் காணாமல் போய் விடும் போது எல்லா உணர்வுகளும் அழிந்து விடுகின்றன. மாறாக அல்லாஹ்வின் மீதான அச்சமும் இல்லாமல் போய் விடுகின்றது. அல்லாஹ்வின் மீது அச்சமே இல்லாமல் ஆகி விடும் போது அல்லாஹ்வின் பார்வையில் அல்லது அவனது தூதர் (ஸல்) அவர்களிடத்தில் யாருக்கு என்ன மதிப்புள்ளது? என்பதெல்லாம் எந்த தாக்கத்தையும் ஏற்படுத்துவதில்லை. ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் (ரலி) அவர்களின் ஷஹாதத் எவ்வாறு நடைபெற்றது. அன்னாரின் அருளுக்குரிய சடலத்தோடு எவ்வாறு நடந்து கொள்ளப்பட்டது? என்ற சம்பவத்தை ஒருவர் கேள்விப்படும் பொழுது, வெளிப்படையாக வேண்டுமானால் கலிமா கூறியவர்களாக இருந்திருக்கலாம். ஆனால் உண்மையில் அவர்களுக்கு அந்த அநீதியாளர்கள் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை இல்லை என்ற நம்பிக்கையில் உறுதிபெற்று விடுவார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மனித நேயத்தை நிலைநிறுத்த தோன்றினார்கள். அன்னார் போர் செய்வதற்கு சில விதிமுறைகளை கற்றுத் தந்தார்கள். அல்லாஹ் திருக்குர்ஆனில் எதிரிகளோடு நீதியோடும், நடுநிலையோடும் நடந்து கொள்ளும்படி நமக்கு அறிவுரை செய்துள்ளான். இஸ்லாம் மற்றும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை அழிக்க நினைத்த எதிரிகளிடம் கூட போரின்போது கொல்லப்பட்டவர்களின் உடல்களை அரபு நாட்டு வழிமுறையின்படி அவமதிப்பதை அல்லாஹ் தடை செய்தான். மனிதநேயம் பாழ்படுத்தப்படுகின்ற எல்லா வழிமுறைகளையும் தீயபழக்கங்களையும் ஒழிக்கவே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தோன்றினார்கள். அன்னார் காஃபிர்களிடம் கூட மென்மையும் கருணையும் காட்டினார்கள். ஆனால் அல்லாஹ்வே! நான் இவர் மீது நேசம் கொள்கிறேன்.

நீயும் இவரை நேசிப்பாயாக என்று அல்லாஹ்வின் அன்பிற்குரிய பேரனுக்காக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் துஆ செய்தார்களோ, அவர்களை எதிரிகள் கருத்தில் கொள்ளவில்லை. மேலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

எவர் என்னுடைய இந்த பேரன்களை நேசிப்பாரோ அவர் என்னை நேசிக்கின்றார். மேலும் எவர் என்னை நேசிக்கின்றாரோ அவர் அல்லாஹ்வை நேசிக்கின்றார். அல்லாஹ்வின் மீதான அன்பின் காரணத்தால் அவர் சொர்க்கத்தில் நுழைவார். மேலும் இதேபோன்று அவரை வெறுப்பதன் மூலமாக அல்லாஹ்வின் வெறுப்பை அவர் சம்பாதித்துக் கொள்வார். எவருக்கு ஒருவரிடத்தில் உண்மையான அன்பு இருக்குமோ அவருடைய அன்பிற்குரியவர் மீதும் அவர் அன்பு செலுத்துவார். ஒரு பக்கம் அன்பிற்கான வாதமும் மறுபக்கம் அன்பிற்குரியவரின் அன்பர்களிடத்திலும், பிள்ளைகளிடத்திலும் வெறுப்பு என்பது ஒன்றுசேர முடியாது. அல்லது ஒருவர் மீது அன்பு செலுத்துவதாக வாதம் செய்து அவருடைய அன்பர்களிடத்தில் அவர் உயிரோடிருக்கும் வரை அன்பு செலுத்தி விட்டு அவர் கண்மூடிய உடனேயே அன்பிற்குரியவரின் அன்பர்களின் மீதான வாதம் வெறும் வாதமாக இருந்தால், அது உலகவாதிகளின் அன்பாகும். இது அல்லாஹ்வுடன் தொடர்புடையவர்களின் அன்பரின் நடைமுறையாக இருக்க முடியாது.

ஒருமுறை ஹஸ்ரத் அபூபக்கர் சித்தீக் (ரலி) அவர்கள் தமது கிலாஃபத்தின் காலகட்டத்தில், ஓர் இடத்திற்குச் சென்று கொண்டிருந்தார்கள். வழியில் அன்னார் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அன்பிற்குரிய பேரன், மற்ற பிள்ளைகளோடு விளையாடிக் கொண்டிருப்பதைக் கண்டு தோளில் தூக்கிக் கொண்டார்கள். பின்னர் அன்பு செலுத்தியவாறு கூறினார்கள். எனது அன்பிற்குரிய எஜமானர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு இவர் மிகவும் அன்பிற்குரியவராவார். எனவே நான் இவர் மீது அன்பு செலுத்துகிறேன். ஆக இதுதான் விசுவாசம் மற்றும் அன்பின் வழிமுறையாகும். ஆனால் கர்பலா சம்பவத்தின்போது அன்னாருடன் (ஹஸ்ரத் ஹுஸைன் (ரலி) அவர்களுடன்) எவ்வாறு நடந்து கொள்ளப்பட்டது? எந்த போதனையை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கொண்டு வந்தார்களோ அது எந்த அளவுக்கு புறக்கணிக்கப்பட்டது?

அறிவிப்பில் வருகின்றது. அன்னாரின் படையினை எதிரிகள் சுற்றி வளைத்த போது ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் (ரலி) அவர்கள் தமது குதிரையை நதியை நோக்கி திருப்பினார்கள். நதிக்கும் அவருக்கும் இடையில் தடையை ஏற்படுத்துங்கள் என ஒருவன் கூறினான். எனவே அன்னாரின் வழிப்பாதையை மக்கள் மறித்தனர். அன்னாரை நதி வரை செல்லவிடவில்லை. அந்த நபர் ஒரு அம்பை எய்தான். அது அன்னாரின் கழுத்தின் கீழ்ப்பகுதியை துளைத்தது.

அறிவிப்பாளர் அந்த போரின் நிலையைப் பற்றி கூறுகின்றார்.

அன்னார் தலைப்பாகை அணிந்திருந்தார்கள். மேலும் எவ்வாறு கோபமுற்ற ஒரு குதிரை வீரர் அம்புகளிலிருந்து தப்பித்தவாறு தாக்குதல் செய்வாரோ அதுபோன்று அன்னார் நடந்தவாறு போர் செய்தார்கள்.

நான், ஹஸ்ரத் ஹுஸைன் (ரலி) அவர்கள், ஷஹீது ஆவதற்கு சற்று முன்னர் இவ்வாறு கூறுவதை கேட்டேன். அல்லாஹ்வின் மீது ஆணையாக! என்னுடைய கொலையை விட அல்லாஹ் அதிகமாக கோபப்படும் அளவிற்கு நீங்கள் எனக்குப் பிறகு வேறெந்த இறையடியாரையும் கொலை செய்யமாட்டீர்கள்.

அல்லாஹ்வின் மீது ஆணையாக! உன்னை இழிவுபடுத்தி, எனக்கு அல்லாஹ் கண்ணியம் வழங்குவான் என எனக்கு நம்பிக்கை உள்ளது. மேலும் நீ ஆச்சரியப்படும் அளவில் உன்னை அல்லாஹ் பழிவாங்குவான்.

அல்லாஹ்வின் மீது ஆணையாக! நீ என்னை கொலை செய்து விட்டால் அல்லாஹ் உன்னோடு போரிடுவான். உன்னுடைய இரத்தம் சிந்தப்படும். அல்லாஹ் அதன் மீதும் திருப்தி அடையமாட்டான். எதுவரையென்றால் அல்லாஹ் பெரும் தண்டனையைப் பல மடங்கு உனக்கு அதிகரித்து விடுவான்.

அன்னாரை ஷஹீதாக்கிய பிறகு கூஃபாவாசிகள் எவ்வாறு நடந்து கொண்டார்கள் என்றால் கூடாரங்களை சூறையாடத் தொடங்கினர். எந்த அளவுக்கு என்றால் பெண்களின் தலையிலிருந்த துப்பட்டாவை கூட பிடுங்கிக் கொண்டனர். அமர் பின் ஸாத் என்பவன் யாரெல்லாம் தனது குதிரையின் மூலமாக ஹஸ்ரத் ஹுஸைன் (ரலி) அவர்களை இழிவுபடுத்துவார் எனக் கேட்டான்.

இதைச் செவியுற்று 10 குதிரை வீரர்கள் வந்தனர். அவர்கள் தமது குதிரைகளால் ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் (ரலி) அவர்களின் உடலை சிதைத்தனர். எந்த அளவுக்கு என்றால் அன்னாரின் நெஞ்சையும் முதுகையும் துண்டு துண்டாக்கி விட்டனர்.

இந்த போரில் ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் (ரலி) அவர்களின் உடலில் 45 காயங்கள் அம்பினாலும், 33 காயங்கள் வாளினாலும் ஏற்பட்டிருந்தன. அடுத்து அநீதியின் உச்சகட்டமாக ஹஸ்ரத் ஹுஸைன் (ரலி) அவர்களின் தலை அடுத்த நாள் உடம்பிலிருந்து துண்டிக்கப்பட்டு கூஃபா கவர்னர் உபைதுல்லாஹ் பின் ஸியாருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அந்த கவர்னர் ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் (ரலி) அவர்களின் தலையை கூஃபாவில் தரையில் நாட்டினான்.

அதன் பிறகு ஸஹர் பின் கேய்ஸ் மூலமாக யஸீதிடம் தலை அனுப்பி வைக்கப்பட்டது. ஆக, அன்னார் ஷஹீதாக்கப்பட்ட பிறகு அன்னாரின் சடலத்தோடு எதிரிகள் இவ்வாறு நடந்து கொண்டார்கள். இதைவிட கொடூரமான செயல் வேறு என்னவாக இருக்க முடியும்? அன்னாரின் உடல் சிதைக்கப்பட்டது. தலை உடம்பிலிருந்து துண்டிக்கப்பட்டது. இதுபோன்று சடலத்தை அவமதிக்கின்ற செயலை ஒரு கொடிய எதிரி தனது மற்ற எதிரியிடம் செய்வானேயொழிய கலிமாக கூறக்கூடிய மற்றும் மனித நேயத்தை பேணுவதற்கு மிக கண்டிப்புடன் தன்னை பின்பற்றுபவர்களுக்கு எந்த நபி போதித்தாரோ அந்த நபியைச் சார்ந்திருப்பவரால் இவ்வாறு செய்ய முடியாது.

எனவே நிச்சயமாக இந்த செயலை செய்தவர்களின் உள்ளத்தின் நிலை இச்செயலிலிருந்து வெளிப்படுகின்றது. அவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்றால் அவர்கள் உலகவாதிகள் ஆவர். மேலும் தனது நோக்கத்தை அடைவதற்காக எல்லா எல்லைகளையும் மீறக்கூடியவர்கள் ஆவர். எனவே (எல்லையை) மீறினார்கள். மார்க்கத்தோடு அவர்களுக்கு கடுகளவும் தொடர்பிருக்கவில்லை. இவர்களுடைய உலக இச்சைகளை உணர்ந்துதான் ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் (ரலி) அவர்கள் யஸீதிடம் பைஅத் செய்வதிலிருந்து நிராகரித்து விட்டார்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:**

ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் (ரலி) அவர்கள் தீயவனின் கைகளில் பைஅத் செய்வதை விரும்பவில்லை. ஏனென்றால் அதனால் மார்க்கத்திற்கு கேடு ஏற்படும்.

அடுத்து கூறினார்கள்: கெட்ட யஸீதிடம் பைஅத் செய்வதில் பெரும்பாலார் ஒன்றுபட்டனர். ஆனால் ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் மற்றும் அன்னாருடைய ஜமாஅத் மக்கள் அதனை ஏற்றுக் கொள்ளாமல் நிராகரித்து விட்டனர். ஆனால் பைஅத் செய்யாதிருந்த போதிலும் ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் (ரலி) அவர்கள் சமாதானத்திற்கு முயற்சி செய்தார்கள். முஸ்லிம்கள் கொலை செய்யப்படலாம் என்பதை உணர்ந்து அன்னார் தன்னுடன் இருந்தவர்களை திருப்பி அனுப்பி வைத்து விட்டார்கள். இப்போது நிலைமை மோசமாக உள்ளது. எவர்கள் அன்னாருடன் இருக்க வேண்டும் என அடம்பிடித்தார்களோ அவர்களைத் தவிர மற்றவர்களை இப்போது நீங்கள் சென்று விடலாம் எனக் கூறி அனுப்பி வைத்து விட்டார்கள். அவர்களின் எண்ணிக்கை சுமார் 30, 40 இருக்கும். அல்லது அவர்கள் அன்னாரின் குடும்ப உறுப்பினர்களாயிருப்பர்.

அன்னார் (ஹஸ்ரத் ஹுஸைன் (ரலி) யஸீதின் பிரதிநிதிகளிடம் நாங்கள் போரை விரும்பவில்லை என்றும் கூறினார்கள். என்னை திரும்பிச் செல்ல அனுமதியுங்கள். நான் சென்று அல்லாஹ்வை வணங்குவேன் என்று அன்னார் கூறினார்கள். அல்லது இஸ்லாத்திற்காக போரிட்டு நான் ஷஹீதாகும் விதமாக என்னை ஏதாவது நாட்டின் எல்லையின் பக்கம் செல்ல அனுமதியுங்கள். அல்லது இதே நிலையில்

என்னை யஸீதிடம் கொண்டு செல்லுங்கள். நான் அவருக்கு உண்மையைப் புரிய வைக்கின்றேன் என்றெல்லாம் கூறினார்கள். ஆனால் அந்த பிரதிநிதிகள் எதனையும் ஏற்றுக் கொள்ளவில்லை. போர் அன்னார் மீது திணிக்கப்பட்ட பிறகு தைரியமிக்க போர் வீரனாக அவர்களை எதிர்கொள்வதை தவிர்த்து அன்னாருக்கு வேறு வழியில்லாமல் போனது. எப்படியிருப்பினும் நான் கூறியது போன்று அன்னாருடன் மிக குறைவான நபர்களே இருந்தனர். மொத்தம் 70, 72 நபர்களே இருந்தனர். ஆனால் அவர்களுக்கு எதிரில் ஒரு மாபெரும் படையிருந்தது. அதனை அவர்களால் எவ்வாறு எதிர்கொள்ள முடியும்? எப்படியிருப்பினும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியது போன்று ஒரு நல்ல நோக்கத்திற்காக அன்னார் தமது உயிரை தியாகம் செய்தார்கள். பழிவாங்குவதற்கு அல்லாஹ்வுக்கும் சில வழிமுறைகள் உள்ளன. ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் (ரலி) அவர்கள் அல்லாஹ் பழிவாங்குவான் என கூறியிருந்தார்கள். அதேபோன்று அல்லாஹ் பழிவாங்கினான். யஸீதிற்கு தற்காலிக வெற்றிதான் கிடைத்தது. ஆனால் இன்று எவராவது யஸீதை அவனது நல்ல பணிக்காக நினைவு கூறுகின்றாரா? நற்பெயரின் காரணமாக அவன் நினைவு கூறப்பட்டிருந்தால் முஸ்லிம்கள் அவனது பெயரையே தமது பெயராக வைத்திருப்பார்கள். ஆனால் இன்று எவரும் தமது பிள்ளைக்கு யஸீத் என்று பெயர் வைப்பதில்லை. அவன் இன்று நினைவு கூறப்படுகின்றான் என்றால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியதுபோன்று கெட்ட யஸீத் என்றுதான் நினைவு கூறப்படுகிறான்.

ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் (ரலி) அவர்களுக்கு ஒர நோக்கமிருந்தது. அவர் அரசாட்சியை விரும்பவில்லை. அன்னார் உண்மையை நிலைநாட்ட விரும்பினார்கள். அதனை அன்னார் செய்தும் காட்டினார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இதனை தெளிவாக விளக்கியுள்ளார்கள்.

கிலாஃபத்தை தேர்ந்தெடுக்கும் உரிமை நாட்டு மக்களுக்கு உரியது. ஜமாஅத்திற்குரியது. எந்த மகனும் தனது தந்தையின் வாரிசாக அதற்கு உரிமை கொண்டாட முடியாது. இந்த விதிமுறையினை இமாம் ஹுஸைன் (ரலி) நிலைநாட்டினார்கள். இந்த விதிமுறை எவ்வாறு முன்னர் புனிதமாக இருந்ததோ இன்றும் அது புனிதமாகவே உள்ளது. மாறாக ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் (ரலி) அவர்களின் ஷஹாதத் இவ்வுரிமையை மேலும் தெளிவுபடுத்தி விட்டது. எனவே வெற்றி பெற்றது ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் (ரலி) அவர்களேயொழிய, யஸீது அல்ல. அடுத்து இயற்கையின் பழிவாங்குதலின் மற்றொரு கொடூர வழிமுறையைப் பாருங்கள்.

இது தொடர்பாகவும் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இந்த சம்பவத்தை தனது புத்தகமான கிலாஃபத்தே ராஷிதாவில் குறிப்பிடுகின்றார்கள். வரலாற்றில் வருகின்றது. யஸீத் மரணித்த பிறகு அவனது மகன் பதவி ஏற்றார். அவனது பெயரும் அவனது தாத்தாவின் பெயரைப் போன்று முஆவியா –வாக இருந்தது. அவன் மக்களிடம் பைஅத் வாங்கிய பிறகு தனது வீட்டிற்கு சென்று விட்டான். 40 நாட்கள் வரை வெளியே வரவில்லை. பின்னர் ஒருநாள் வீட்டை விட்டு வெளியேறி மேடையில் ஏறி மக்களிடம் கூறினார். உங்களிடம் பைஅத் வாங்குவதற்கு என்னை தகுதியானவன் எனக் கருதி நான் உங்களிடம் பைஅத் வாங்கவில்லை. மாறாக உங்களிடம் பிரிவினை வந்து விடக்கூடாது என விரும்பிதான் பைஅத் வாங்கினேன். மேலும் உங்களில் எவராவது பைஅத் வாங்கும் தகுதியுடையவர் உள்ளாரா? அவ்வாறிருந்தால் அவரிடம் இப்பதவியை ஒப்படைத்து விட்டு நான் விலகிவிடலாமே? என்று தான் அன்றிலிருந்து இதுவரை சிந்தித்துக் கொண்டிருந்தேன். சிந்தித்த பின்னரும் உங்களில் அதற்கு தகுதியுடைய எவரும் எனக்கு தென்படவில்லை. எனவே மக்களே! நன்றாக கேட்டுக் கொள்ளுங்கள். நான் இப்பதவிக்கு தகுதியானவன் இல்லை. என்னுடைய தந்தையும், பாட்டனாரும் கூட இப்பதவிற்கு தகுதியானவர் இல்லை. எனது தந்தை அந்தஸ்தில் ஹஸ்ரத் ஹுஸைனை விட மிகவும் குறைவானவராக இருந்தார். மேலும் அவருடைய தந்தை ஹஸன், ஹுஸைனின் தந்தையை விட குறைந்த அந்தஸ்தைக் கொண்டவராகவே இருந்தார். ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் கிலாஃபத்திற்கு தகுதி படைத்தவராக இருந்தார்கள். அவருக்குப் பிறகு எனது பாட்டனார் மற்றும் எனது தந்தையை விட ஹஸ்ரத் ஹஸன், ஹஸ்ரத் ஹுஸைன் (ரலி) கிலாஃபத்திற்கு அதிக உரிமையுடையவராக இருந்தனர். எனவே நான் இந்த பொறுப்பிலிருந்து விலகிக் கொள்கிறேன்.

அவர் இவ்விஷயங்களைக் கூறி எவ்வாறு தந்தை முகத்தில் கரியைப் பூசினார் என்று இப்பொழுது பாருங்கள்! ஏனென்றால் அவரிடத்தில் இறையச்சமிருந்தது. தக்வாவில் சில அம்சங்கள் அவரிடத்தில் இருந்தன. உலகவாதிகளுக்கும் நல்ல உண்மையை விரும்பக்கூடிய நீதியுடன் செயல்படக்கூடிய பிள்ளைகள் பிறக்கின்றன. எவ்வாறிருப்பினும், இனி யாரிடம் நீங்கள் பைஅத் செய்ய விரும்புகிறீர்களோ, பைஅத் செய்து கொள்ளுங்கள் என்று அவர் கூறினார்.

அவருடைய தாய் திரைக்கு பின்னால் இருந்து அவனது சொற்பொழிவைக் கேட்டு கொண்டிருந்தாள். அவள் அவனின் சொற்பொழிவுவைக் கேட்டு மதி கெட்டவனே! நீ உனது குடும்பத்தின் கண்ணியத்தைக் கெடுத்து விட்டாய் என மிக கோபத்துடன் கூறினாள். அதற்கு அவர் (யஸீதின் மகன்) நான் கூறியது உண்மையாகும். இனி உங்கள் விருப்பம். நீங்கள் என்னைப் பற்றி என்ன வேண்டுமானாலும் கூறிக் கொள்ளுங்கள் என்று கூறினார். இதன் பிறகு அவர் தனது வீட்டினுள் சென்று விட்டார். வீட்டை விட்டு வெளியே வரவில்லை. வீட்டிலேயே அமர்ந்திருந்தார். சில நாட்களிலேயே மரணித்து விட்டார்.

ஆக, யஸீதின் கிலாஃபத்தை மற்றவர்கள் விரும்பியது ஒருபக்கமிருக்கட்டும். அவனது மகனே அதனை விரும்பவில்லை என்பதற்கு இது எவ்வளவு பெரிய சாட்சியாகும்? ஏதோ ஒரு பேராசையின் காரணமாக மகன் ஒன்றும் இவ்வாறு செய்யவில்லை. அல்லது எதிர்ப்பிற்கு பயந்தும் அவ்வாறு செய்யவில்லை. மாறாக, அவன் அமைதியாக சிந்தித்த பிறகுதான் தன்னுடைய தந்தையைவிட ஹஸ்ரத் ஹுஸைன் அதிக தகுதியுடையவர் மற்றும் தன்னுடைய பாட்டனாரை விட ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் அதிக தகுதியுடையவர் என தனது உள்ளத்தால் இந்த முடிவிற்கு வந்தார். மேலும் நான் இந்த சுமையை சுமக்கத் தயாரில்லை என முடிவு செய்தார்.

முஆவியா, யஸீதை நியமனம் செய்தது தேர்தல் மூலமாக என்று கூற முடியாது. மகனே தனது தந்தையின் உண்மையை வெளிப்படுத்தி அவரை கீழ்த்தரமானவர் என நிரூபிப்பதை விட ஒருவரின் இழிவிற்கு வேறு என்ன போதுமானதாக இருக்க முடியும்? ஆக, ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் (ரலி) அவர்களின் ஷஹாதத் (உயிர்தியாகம்) நமக்கு பல பாடங்களை கற்றுத் தருகின்றது. அன்னார் தனது உயிரை தியாகம் செய்து உண்மையை நிலைநாட்டினார்கள். அல்லாஹ் நம்மை நேர்வழியில் எப்போதும் நடத்தி வர நாம் துஆவின் மூலமாக அல்லாஹ்விடத்தில் உதவி தேடிவர வேண்டும்.

**ஓரிடத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

ஹஸ்ரத் மஸீஹை (அலை) ஹஸ்ரத் இமாம் ஹுஸைனோடு உவமையாகக் கூறப்பட்டுள்ளது.

இந்த உவமையிலிருந்து வரவிருக்கின்ற மஸீஹும் இந்த உவமையில் பங்கு பெறுவார் என்பது வெளிப்படையாகும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கும் ஹஸ்ரத் ஹுஸைன் அவர்களின் ஒப்புமை பொருந்துகின்றது. ஆனால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் காலத்தில் இஸ்லாத்திற்கு களங்கம் ஏற்படுத்திய அந்த சம்பவங்கள் மீண்டும் நடைபெறாது. இது இறைநியதியாகும். எப்படியிருப்பினும், ஈமானின் தடுமாற்றத்திற்கு காரணமாகின்ற விஷயங்களிலிருந்து தப்பித்திருக்க துஆவின் பக்கம் எப்பொழுதும் நாம் கவனம் செலுத்த வேண்டும். நான் கூறியது போன்று முன்பு நடைபெற்ற சம்பவங்களை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் காலத்தில் மீண்டும் அல்லாஹ் நடக்கவிடமாட்டான். ஏனென்றால் கிலாஃபத்தின் தொடர் இங்குள்ளது. மேலும் ஒரு வழிமுறைக்கேற்ப கிலாஃபத் தேர்தலும் உள்ளது. மேலும் மஸீஹ், மஹ்திக்குப் பிறகு அந்த (கிலாஃபத்) தொடர் நிலைபெறும் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் முன்னறிவிப்பும் செய்துள்ளார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களும் முன்னர் நடைபெற்ற விஷயங்கள் மீண்டும் நடைபெறாது என்பதனை விவரித்துள்ளார்கள். சொர்க்கத்திலிருந்து முதல் ஆதம் வெளியேற்றப்பட்டார். ஆதமின் பிள்ளைகள் சொர்க்கத்தில் நுழைவதற்கு ஒரு புதிய வடிவில் ஏற்பாடு நடைபெறுவதற்காக அல்லாஹ் ஆதம் என்ற பெயரை எனக்கு வைத்துள்ளான் என ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்.

அடுத்து கூறினார்கள்:

முதல் மஸீஹை யூதர்கள் சிலுவையில் அறைந்தனர். அல்லாஹ் எனக்கு மஸீஹ் என பெயர் வைத்து சிலுவையை முறிப்பதற்குரிய ஏற்பாட்டை செய்துள்ளான்.

ஆக, அல்லாஹ் முதல் முறை ஏற்பட்ட தோல்வியை இரண்டாவது முறை வெற்றியாக மாற்றுவான். முதலில், ஹுஸைனை யஸீத் ஷஹீதாக்கினான் என்றால் இரண்டாவது ஹுஸைனின் மூலமாக யஸீதின் படைக்கு தோல்வியை வழங்குவான் இன்ஷா அல்லாஹ். நாம் இந்த ஈமானில் தான் நிலைநிற்கின்றோம். முஹர்ரம் மாதம் நமக்கு வழங்குகின்ற பாடம் என்னவென்றால், நாம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மற்றும் அன்னாரின் சந்ததியின் மீது எப்போதும் ஸலவாத் ஓதிக் கொண்டேயிருக்க வேண்டும். காலத்தின் இமாமின் நோக்கங்கள் நிறைவேற ஸலவாத், துஆ மற்றும் தமது நிலைமைகளில் தூய மாற்றத்தினை ஏற்படுத்தி நமது பங்கினை வழங்க முயற்சி செய்து வர வேண்டும். மேலும் இந்த யஸீத் பண்பு கொண்ட மக்கள் முன்பு உறுதிப்பாட்டினை வெளிப்படுத்தியவாறு எப்பொழுதும் நிலைநில்லுங்கள். நிச்சயமாக இந்த முறை யஸீத் வெற்றி பெறமாட்டான். மாறாக, ஹுஸைனீக்களே வெற்றி பெறுவர். உறுதிப்பாட்டிற்கான பாக்கியம் கூட அல்லாஹ்வின் உதவியில் தான் கிடைக்கின்றது. மேலும் அல்லாஹ்வின் உதவியைப் பெறுவதற்கு அல்லாஹ் துஆ மற்றும் பொறுமையை மேற்கொள்ளும்படி கூறியுள்ளான். அநீதியை சகித்துக் கொள்வது மாத்திரம் பொறுமையல்ல. நடந்து முடிந்து விட்டதன் மீது அமைதியாக அமர்ந்திருப்பதும் பொறுமையல்ல. மாறாக நிலையான மனப்பான்மையுடன் நல்ல பணிகளை தொடர்வது மற்றும் எந்த அபாயத்தையும் அச்சத்தையும் பொருட்படுத்தாமல் உண்மையை வெளிப்படுத்திக் கொண்டே செல்வதும் தான் பொறுமையாகும். ஆக உண்மையை வெளிப்படுத்த ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் (ரலி) அவர்கள் நம்முன் நிலைநிறுத்தியிருக்கின்ற முன்மாதிரிகளை நாம் எப்போதும் கருத்தில் கொள்ள வேண்டும். நாம் அதில் நிலைநின்றால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு நிச்சயிக்கப்பட்ட வெற்றியின் பங்குதாரர்களாக நாம் திகழ்வோம் இன்ஷா அல்லாஹ். துஆ ஒப்புக் கொள்ளப்படுவதற்கு ஸலவாத் ஓதுவதும் மிக முக்கியமான விஷயமாகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களும் இதன் பக்கம் கவனமூட்டியுள்ளார்கள். ஹதீஸ்களிலும் அதிக அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது. எல்லாவற்றையும் விட அல்லாஹ் திருக்குர்ஆனிலும் ஸலவாத் ஓதுவதன் பக்கம் கவனமூட்டியுள்ளான். எனவே பொதுவாக நாம் ஸலவாத் ஓதுவதன் பக்கம் கவனமுடையவர்களாக இருக்க வேண்டும். மேலும் இம்மாதத்தில் குறிப்பாக நாம் இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். எவ்வாறு இதற்கு முன் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் இதன் பக்கம் கவனமூட்டியுள்ளார்களோ அதனை நான் மீண்டும் உங்களுக்கு நினைவுபடுத்துகிறேன். இம்மாதத்தில் கண்டிப்பாக அதிக அளவில் ஸலவாத் ஓதுங்கள். கர்பலா சம்பவத்தின் உணர்வுகளை வெளிப்படுத்தவும் அநீதிகளுக்கு முடிவுகட்டவும் அல்லாஹ்வின் உதவியைப் பெறவும் இது மிகச் சிறந்த வழிமுறையாகும். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது ஓதப்பட்ட ஸலவாத் அன்னாரின் ஆத்மீக, பௌதீக சந்ததிகளின் மன அமைதிக்கு காரணமாகவும் அமைகின்றது. முன்னேற்றங்களின் காட்சிகளும் நமக்கு தென்படுகின்றன. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அன்பர்களின்மீது கொண்ட அன்பினை வெளிப்படுத்த இது சிறந்த வழிமுறையுமாகும். மேலும் இக்காலத்தில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உண்மை பேரன்பரின் நோக்கங்களை முழுமைபெறச் செய்வதிலும் இந்த ஸலவாத் எண்ணற்ற பரக்கத்துகளை பெற்றுத் தரும் இன்ஷா அல்லாஹ். அல்லாஹ் நமக்கு இந்நாட்களில் அதிகமதிகம் ஸலவாத் ஓதும் பாக்கியத்தை தந்தருள்வானாக! மேலும் இந்த ஸலவாத் நம்முடைய பரக்கத்திற்கும் காரணமாக அமையும்.

இறுதியாக நான் ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் (ரலி) அவர்களின் உயரிய அந்தஸ்து தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் மேற்கோள் ஒன்றினைப் படிக்கிறேன். அதனை ஒவ்வொரு அஹ்மதியும் எப்போதும் கருத்தில் கொள்ள வேண்டும்.

ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் அவர்களின் உயர் அந்தஸ்து தொடர்பாக ஒரு அஹ்மதி தவறாக பேசியதாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு தகவல் தரப்பட்டது.

**அதற்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:**

ஹுஸைன் (ரலி) அவர்கள், காலத்தின் கலீஃபா அதாவது தீய யஸீதிடம் பைஅத் செய்யாத காரணத்தினால் நவூதுபில்லாஹ் கிளர்ச்சியாளர் ஆவார். மேலும் யஸீது உண்மையாளன் ஆவான் என்றும் என்னுடைய ஜமாஅத்தைச் சார்ந்த சிலர் அறிவீனமாக இதுபோன்ற பேச்சுக்களை பேசியதாக எனக்கு தகவல் கிடைத்தது. லஃனத்துல்லாஹி அலல் காஸிபீன் – பொய்யர்களின் மீது அல்லாஹ்வின் சாபம் உண்டாவதாக. என்னுடைய ஜமாஅத்தைச் சார்ந்த ஒரு இறையச்சமுடையவரின் வாயிலிருந்து இதுபோன்ற தீய சொற்கள் வெளி வந்திருக்குமென நான் நம்பவில்லை.

எவ்வாறிருப்பினும், யஸீது ஒரு கெட்ட இயல்பு கொண்ட உலகத்தின் புழு மற்றும் கொடுமைக்காரன் ஆவான். மேலும் எவ்விஷயங்களினால் ஒருவர் நம்பிக்கையாளர் என அழைக்கப்படுவாரோ அவ்விஷயங்கள் அவனிடத்தில் இருக்கவில்லை. **நம்பிக்கையாளராக ஆவது சாதாரண விஷயமல்ல. அல்லாஹ் அப்படிப்பட்டவர்களைப் பற்றி கூறுகின்றான்.**

எவர்களுடைய செயல்கள் அவர்களின் நம்பிக்கைக்கு சாட்சி பகர்கின்றனவோ அவர்களே நம்பிக்கையாளர்கள் ஆவர். அவர்களின் உள்ளங்களில் ஈமான் எழுதப்படுகின்றது. மேலும் அவர்கள் எல்லாவற்றையும் விட தமது இறைவன் மற்றும் அவனது திருப்திக்கே முதன்மை வழங்குகின்றனர். மேலும் இறையச்சத்தின் நுட்பமான வழிகளை அவர்கள் இறைவனுக்காக மேற்கொள்கின்றனர். மேலும் அவனது அன்பில் மாய்ந்து விடுகின்றனர். சிலையைப் போன்று இறைவனிடமிருந்து விலக்குகின்ற எல்லா விஷயங்களிலிருந்தும் அது ஒழுக்கநிலைகளாக இருந்தாலும் சரி அல்லது தீய செயல்களாக இருந்தாலும் சரி அல்லது கவனக்குறைவு மற்றும் சோம்பலாக இருந்தாலும் சரி எல்லாவற்றிலிருந்தும் தங்களை தொலைவில் விலக்கிக் கொள்கின்றனர்.

ஆனால் இவ்விஷயங்கள் துர்பாக்கியசாலியான யஸீதிற்கு எங்கு கிடைக்கப் பெற்றது. உலக நேசம் அவனை குருடனாக்கியிருந்தது. ஆனால் ஹுஸைன் (ரலி) அவர்கள் மிகவும் தூயவராக இருந்தார்கள். இறைவன் தனது கரங்களினால் தூய்மைப்படுத்திய, தனது அன்பை வழங்கிய நல்லடியார்களைச் சார்ந்தவராக நிச்சயமாக அவர் இருந்தார். நிச்சயமாக அவர் சொர்க்கத்தின் தலைவர்களை சார்ந்தவர்களாவார். மேலும் கடுகளவு அவர் மீது பகைமை கொள்வது ஈமானின் அழிவிற்கு காரணமாகும். மேலும் அந்த இமாமின் இறையச்சம், அன்பு, பொறுமை, உறுதிப்பாடு, தூய்மை, இறைவணக்கம் நமக்கு அழகிய முன்மாதிரி ஆகும். நாம் அவருக்கு கிடைக்கப் பெற்ற நேர்வழியைப் பின்பற்றுபவர்களாவோம். அவர் மீது பகைமை கொண்ட உள்ளம் அழிந்து விட்டது. செயல்ரீதியாக அவர் மீதான அன்பை வெளிப்படுத்துகின்ற உள்ளம் வெற்றி பெற்று விட்டது. எவ்வாறு ஒரு தூய கண்ணாடி ஒரு அழகிய மனிதனின் சித்திரத்தை தன்னுள் ஈர்த்துக் கொள்கின்றதோ அதேபோன்று அவரின் ஈமான், ஒழுக்கம், வீரம், உறுதிப்பாடு, இறைநேசம் என்ற எல்லா விஷயங்களையம் நிழலாக முழுமையாக பின்பற்றுபவதுடன் எவர் அதனை தன்னுள் எடுத்துக் கொள்கின்றாரோ அவர் வெற்றி பெற்று விட்டார். இம்மக்கள் உலகத்தின் கண்களிலிருந்து மறைவானவர்கள் ஆவர். அவர்களின் மகத்துவத்தை அவர்களைச் சார்ந்தவர்களைத் தவிர வேறு எவர் அறிவார்! உலகத்தின் கண்கள் அவரை அடையாளம் காண முடியாது. ஏனென்றால் அவர் மக்களால் உலகத்திலிருந்து தொலைவில் உள்ளார். ஹுஸைன் (ரலி) அவர்களின் ஷஹாதத் சம்பவம் இதனாலேயே நிகழ்ந்தது. ஏனென்றால் அவர் அடையாளம் கண்டுகொள்ளப்படவில்லை. உலகம் எந்த தூய நல்லடியாரை அவரின் காலத்தில் அன்பு செலுத்தியது! அவ்வாறே ஹுஸைன் (ரலி) அவர்களிடமும் உலகம் நடந்து கொண்டது.

சுருக்கமாக, ஹஸ்ரத் ஹுஸைன் (ரலி) அவர்களை ஏளனம் செய்வது மிகவும் கீழான, ஈமானற்ற செயலாகும். எந்த நபர் ஹஸ்ரத் ஹுஸைன் (ரலி) அவர்கள் அல்லது தூய தலைவர்களை ஏளனம் செய்கின்றாரோ அல்லது இழிவான சொற்களை தனது நாவினால் கூறுகின்றாரோ அவர் தனது ஈமானை வீணாக்கிக் கொள்கின்றார். ஏனென்றால் எவர் நல்லடியர்கள் மற்றும் அவனது அன்பிற்குரியவர்களின் எதிரியாக உள்ளார்களோ கண்ணியமிக்க அல்லாஹ் அவரின் எதிரியாகி விடுகின்றான்.

அல்லாஹ் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மற்றும் அன்னாரின் சந்ததிகளை நேசிக்கும் பாக்கியத்தை எப்பொழுதும் நமக்கு வழங்கிக் கொண்டேயிருப்பானாக! பாகிஸ்தான் மற்றும் மற்ற நாடுகளில் எங்கெல்லாம் அல்லாஹ், அவனது தூதரின் பெயரால் அநீதிகள் நடைபெறுகின்றதோ அங்கு அதனை அல்லாஹ் அழிக்க துஆ செய்யுங்கள். இம்மாதத்தில் பாகிஸ்தானிலும் மற்ற நாடுகளிலும் குறிப்பாக ஷியாக்கள் மற்றும் சன்னிகளுக்கிடையே குழப்பம் ஏற்படுகின்றது. ஒருவர் மற்றவரை கொலை செய்கின்றனர். கூட்டங்கள் மீது தீவிரவாத தாக்குதல் நடைபெறுகின்றது. அல்லாஹ் இவற்றிலிருந்து பாதுகாப்பானாக! மேலும் எல்லா முஸ்லிம் நாடுகளிலும் எல்லா முஸ்லிம்களுக்கும் இம்மாதம் பாதுகாப்பான, நலமான மாதமாக கழியட்டுமாக! ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் (ரலி) அவர்களின் ஷஹாதத்தின் உண்மையான நோக்கத்தை இம்மக்கள் புரிந்து கொள்ளட்டுமாக! மேலும் இக்காலத்தில் இமாமை ஏற்றுக் கொள்ளக் கூடியவர்களாகவும், உண்மைப்படுத்தக் கூடியவர்களுமாக இவர்கள் ஆகட்டுமாக! ஆமீன்.

நான் இன்று இரண்டு ஆப்பிரிக்க சகோதரர்கள் மற்றும் பெங்காளி பெண்மணியின் ஜனாஸா தொழுகையை தொழ வைப்பேன்.

சிம்பாப்வேயைச் சார்ந்த மஹ்தி டிப்பானி சாஹிப். இவர் தேசிய தப்லீக் செயலராக இருந்தார்கள். அன்னார் நவம்பர் 15-ல் மரணமடைந்தார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். ஒரு நீண்ட காலமாக தேசிய தப்லீக் செயலராக இருந்தர்கள். 1990 -ல் பைஅத் செய்து அஹ்மதிய்யத்தில் இணையும் பாக்கியம் பெற்றார்கள். அதன் பிறகு எப்போதும் ஜமாஅத் தொண்டுகளில் முன்னிலை வகித்தார்கள். பள்ளிவாசலுக்கான நிலம் வாங்குதல் மற்றும் அலுவலக கட்டடம் கட்டுவதிலும் அன்னார் அங்கு உதவி செய்துள்ளார்கள். மனைவி, 5 மகன்களும் 2 மகள்களும் உள்ளனர். அல்லாஹ்வின் அருளினால் எல்லாரும் திருமணமானவர்கள். அல்லாஹ்வின் அருளால் பிள்ளைகள் உட்பட எல்லாரும் அஹ்மதிகளாக இருந்தனர். இவர்களின் ஒரு மகன் ஹுஸைன் டிப்பானி சாஹிப் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் தலைவர் ஆவார். சிம்பாப்வேயின் தேசிய பொதுச் செயலாளரும் ஆவார். இவரின் மருமகள் லஜ்னா இமாயில்லாஹ்வின் தலைவி ஆவார். ஷஹீது அவர்களின் வயது 69. அல்லாஹ் மறுமையில் அவரின் பதவியை உயர்த்துவானாக!

இரண்டாவது ஜனாஸா டாக்டர் அல்ஹாஜ் அபுபக்ர் கேயி சாஹிபுடையதாகும். இவர் கேம்பியாவின் Health Minister ஆகவும், Social Service Minister ஆகவும் இருந்தார்கள். டிசம்பர் 2 ம் தேதி மரணமடைந்தார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். 1940 -ல் கேம்பியாவில் பிறந்தார்கள். 1974 -ல் General Medical Degree பெற்றார்கள். நாட்டின் பல மருத்துவமனைகளில் தொண்டாற்றி வந்தார்கள். 1999-ல் இருந்து 2004 வரை நுஸ்ரத் ஜஹான் திட்டத்தின் கீழ் நமது அஹ்மதிய்யா முஸ்லிம் மருத்துவமனை தெரன்டமில் டாக்டராக தொண்டாற்றினார்கள். அப்போது அவர்கள் அஹ்மதியாக ஆகவில்லை. 2004-ல் பைஅத் செய்யும் பாக்கியம் பெற்றார்கள். பற்றுமிக்க அஹ்மதி ஆவார்கள். பைஅத் செய்த உடனேயே சந்தா அமைப்பில் பங்கு பெற்றார்கள். தொடர்ந்து இறைவழியில் பெரிய பெரிய தொகையை செலவிட்டார்கள். Private Clinic மூலமாக பல பெண்கள், குழந்தைகளுக்கு இலவசமாக சிகிச்சை செய்தார்கள். இறைவன்பால் மக்களை அழைப்பில் மிகவும் ஈடுபாட்டோடு இருந்தார்கள். ஸயீம் அன்ஸாருல்லாஹ்வாக தொண்டாற்றும் பாக்கியம் பெற்றார்கள். திருக்குர்ஆன் ஓதுவதையும், தஹஜ்ஜுத் தொழுவதையும் வழக்கமாகக் கொண்டிருந்தார்கள். அஹ்மதியான பிறகு அற்புதமான முறையில் தம்மிடத்தில் ஆன்மீக முன்னேற்றம் ஏற்பட்டதை வெளிப்படையாகக் கூறிவந்தார்கள். கிலாஃபத் அமைப்போடு மிக ஆழமான, முன்னுதாரணமான உறவு இருந்தது. மேலும் கலீஃபாக்களோடு விசுவாசமிக்க உறவு இருந்தது. 2009 -ல் அவர் அமைச்சராக நியமிக்கப்பட்டார். அன்னாரின் மரணத்தையொட்டி பாராளுமன்றத்தில் ஒரு கூட்டம் நடைபெற்றது. அதில் எல்லா அரசாங்க அதிகாரிகள் மற்றும் சபாநாயகர் அவருடைய உண்மை, நேர்மை மற்றும் சமுதாய தொண்டினை குறிப்பிட்டுப் பேசினார்கள். மேலும் கடின உழைப்பாளி மற்றும் உண்மையான முஸ்லிம் ஆவார் என்றும் குறிப்பிட்டார்கள். துணைப் பிரதமர் கேம்பியா அமீர் சாஹிப் அவர்களை பாராளுமன்றத்தில் சொற்பொழிவுக்காக அழைத்தார்கள். 10 நிமிடங்கள் பேச நேரம்

வழங்கினார்கள். பாராளுமன்றத்தில் ஜமாஅத்தின் ஒரு அமீருக்கு பேச சந்தர்ப்பம் வழங்கப்பட்டது இதுவே முதல் முறையாகும். அன்னாரின் மரணத்திற்குப் பிறகு அன்னாரின் உடல் பாராளுமன்ற இல்லத்தில் வைக்கப்பட்டது. துணைப் பிரதமர், சபாநாயகர், அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், நண்பர்கள் ஆகியோர் அன்னாரின் உடலுக்கு மரியாதை செலுத்தினார்கள். அரசு மரியாதையுடன் அவர் நல்லடக்கம் செய்யப்பட்டார். தொலைக்காட்சிகளிலும் அன்னாரின் மரணச் செய்தி ஒளிபரப்பானது. அன்னாரின் குடும்பத்தின் ஒரு உறுப்பினர் பாராளுமன்றத்தில் தனது சொற்பொழிவில் அன்னார் மிகவும் உண்மையான முஸ்லிம், ஏக இறைவன் மீதும் இஸ்லாத்தின் அடிப்படையான ஐந்து விஷயங்களின் மீதும் நம்பிக்கை கொண்டவர் என்று குறிப்பிட்டார்கள். ஏழைகளுக்கு இலவச சிகிச்சை வழங்கிய மட்டுமல்லாமல், அரசாங்க உதவியும் கிடைக்கப் பெறச் செய்தார்கள். கேம்பியாவில் அவ்வப்போது அவ்வப்போது ஜமாஅத்திற்கு எதிராக ஏதாவது பிரச்சனை ஏற்பட்டு வந்தது. அன்னார் அரசாங்கத்தில் உயர் பதவியிலிருந்து வந்ததால் ஜமாஅத்திற்கு உதவியாக இருந்தது. இவர்களுக்குப் பதிலாக அரசாங்க மட்டத்தில் நல்ல தாக்கம் கொண்ட ஜமாஅத்திற்கு தொண்டாற்றக் கூடிய சிறந்த நபரை அல்லாஹ் வழங்குவானாக!

மூன்றாவதாக, இஸ்ஸத்துல் நிஸா சாஹிபாவின் ஜனாஸா தொழுகை நடைபெறும். அன்னார் அபூ அஹ்மத் போனியா சாஹிபின் மனைவி ஆவார்கள். பெங்காளி Desk Incharge மற்றும் நம்முடைய முபல்லிக் சாஹிப் ஜனாப் பெரோஸ் ஆலம் சாஹிபின் தாயார் ஆவார்கள். அன்னார் 85 வயதில் மரணமடைந்துள்ளார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன். இவர்கள் 1975 -ல் அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்டார்கள். ஐவேளை தொழுகையை பேணக்கூடியவர் மற்றும் தஹஜ்ஜுத் தொழக் கூடியவர் தூய பெண்மணி ஆவார்கள். தொழுகை விஷயத்தில் எந்த அளவுக்கு தூய்மையை பேணக்கூடியவராக இருந்தார்கள் என்றால் தொழுகைக்கு முன் சுத்தமான ஆடையை அணிந்து தொழுது வந்தார்கள். கிராமத்தில் பெரும்பாலார் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள். ஆனால் அவர்கள் தமது பிள்ளைகளின் கல்வி, தர்பிய்யத்தில் கவனம் செலுத்தினார்கள். தமது ஏழ்மை நிலையிலும் தமது குடும்பத்தன் மற்ற நபர்களையும் கருத்தில் கொள்ளக்கூடிய பெண்மணியாக திகழ்ந்தார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மற்றும் அஹ்மதிய்யா கிலாஃபத்தோடு மிகவும் அன்பு கொண்டிருந்தார்கள். எதிரிகள் அன்னாரிடத்தில் ஜமாஅத்திற்கு எதிராக பேசும் போதெல்லாம் நீங்கள் எப்படிப்பட்ட அருளை நிராகரிக்கின்றீர்கள் என்று உங்களுக்கு தெரியாது என கூறுவார்கள். அன்னார் வஸிய்யத் செய்திருந்தார்கள். அன்னாருக்கு மூன்று மகன்கள் மற்றும் ஐந்து மகள்கள் உள்ளனர். நான் கூறியது போன்று அன்னாரின் ஒரு மகன் இங்கு இலண்டனில் தான் உள்ளார். அல்லாஹ் அன்னாரின் பதவியை உயர்த்துவானாக! மேலும் அன்னாரின் உறவினர் அனைவருக்கும் பொறுமையை வழங்குவானாக! ஆமீன்.

★ ★ ★ ★ ★

**JUMUA KUTHBA**

**HADHRAT KHALIFATUL MASIH V**

**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**

**ON 10.12.2010**

Translated by : **Maulvi ABDUR RAHMAN TAHIR**

Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**